***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
***CC.No.82/2015 – P.W. (LW)***

| | |
|---|---|
| *Name* | சுதாகர் மூத்த பேராசிரியர்<br>தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனை |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *50* |

*1 வது* **எதிரி ஆஜர். 2, 3 வது எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 05.03.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் பொது மருத்துவமனையில் மூத்த பேராசிரியராக பணியாற்றி வருகிறேன்.

கடந்த 02.09.2014 ம் தேதியன்று இரவு 11.04 மணியளவில் நான் தஞ்சை மருத்துவகல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது சுமார் 55 வயது நிரம்பிய சுந்தரம்மாள் க/பெ. கணேசன் என்பவரை அவரது உறவினர் தங்கதுரை மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். 02.09.2014 ம் தேதியன்று இரவு 07.00 மணியளவில் தனது வீட்டில் தெரிந்த இரண்டு ஆண் மற்றும் இரண்டு பெண் நபர்கள் தன்னை இரும்பு கம்பியால் தாக்கியதாக தானே கூறினார். அவரை பரிசோதித்தபோது தலையில் வலது பக்கத்தில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. அவர் சுயநினைவுடன் காணப்பட்டார். அவரை மேல்சிகிச்சைக்காகவும், அவரை மேல் பரிசோதனைக்காகவும் உள்நோயாளியாக அனுமதித்தேன். **(மேற்படி அவருக்கு வழங்கிய விபத்து பதிவேடு அசா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் அரவிந்த் அளித்த Medico legal form அசா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அதே தினம் இரவு 11.15 மணியளவில் சக்கரவர்த்தி என்பவரை அவரது மகன் தங்கதுரை மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். 02.09.2014 ம் தேதியன்று இரவு 09.00 மணியளவில் அடையாளம் தெரிந்த இரண்டு ஆண் மற்றும் இரண்டு பெண்கள் கையாலும், கம்பியாலும் தன்னை தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. தலையின் வலது பக்கத்தில் 4X2.5 cm தோல் ஆழத்திற்கு ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது.

2. அவர் தலையின் மத்திய பகுதியில் 7X0.5 cm தோல் ஆழத்திற்கு ஒரு கிழிந்த காயம் இரத்தக்கசிவுடன் காணப்பட்டது.

அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரை மேல்சிகிச்சைக்காகவும், அவரை மேல் பரிசோதனைக்காகவும் உள்நோயாளியாக அனுமதித்தேன். **(மேற்படி அவருக்கு வழங்கிய விபத்து பதிவேடு அசா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் அரவிந்த் அளித்த Medico legal form அசா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அன்றையதினம் இரவு 11.18 மணியளவில் 40 வயது மதிக்கதக்க ராணி என்பவரை அவரது உறவினர் தங்கதுரை மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். 02.09.2014 ம் தேதியன்று இரவு 09.00 மணியளவில் அடையாளம் தெரிந்த இரண்டு ஆண் மற்றும் இரண்டு பெண்கள் கையாலும், கம்பியாலும் தன்னை தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. அவரது தலையின் முன்பகுதியில் 4X0.5 cm தோல் ஆழத்திற்கு ஒரு கிழிந்த காயம் இரத்தக்கசிவுடன் காணப்பட்டது.

அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரை மேல்சிகிச்சைக்காகவும், அவரை மேல் பரிசோதனைக்காகவும் உள்நோயாளியாக அனுமதித்தேன். **(மேற்படி அவருக்கு வழங்கிய விபத்து பதிவேடு அசா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

அன்றையதினம் இரவு 11.23 மணியளவில் சுமார் 20 வயது நிரம்பிய சதீஸ்குமார் என்பவரை அவரது உறவினர் தங்கதுரை மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். 02.09.2014 ம் தேதியன்று இரவு 09.00 மணியளவில் அடையாளம் தெரிந்த இரண்டு ஆண் மற்றும் இரண்டு பெண்கள் கையாலும், கம்பியாலும் தன்னை தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. அவரது இடது காதின் பின்பகுதியில் 3X0.5 cm தோல் ஆழத்திற்கு ஒரு கிழிந்த காயம் இரத்தக்கசிவுடன் காணப்பட்டது.

2. அவரது இடது காரை எலும்பு பகுதியில் இரத்தகசிவு காணப்பட்டது.

அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரை மேல்சிகிச்சைக்காகவும், அவரை மேல் பரிசோதனைக்காகவும் உள்நோயாளியாக அனுமதித்தேன். **(மேற்படி அவருக்கு வழங்கிய விபத்து பதிவேடு அசா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் அரவிந்த் அளித்த Medico legal form அசா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தாரகள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

காயம்பட்ட நபர் சுயநினைவுடன் இருந்தார் என்றால் சரிதான். காயம்பட்ட நபர் என்ன கூறுகிறாரோ அதை தான் AR copy ல் குறிப்பது வழக்கம் என்றால் சரிதான். அசா.1 சக்கரவர்த்தி இடது காலில் நாய் கடி இருந்ததாக சொல்லவில்லை. நடுதலையிலும், பின் தலையிலும் அவருக்கு காயம் இல்லை என்று சொன்னால் நடுதலையில் இருந்தது. பின் தலையில் இல்லை. அவருக்கு ஏறபட்ட கிழிந்த காயம் கீழே விழுந்தாலும், இடித்து கொண்டாலும் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். 09.00 மணிக்கு சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 2 வது நபர் ராணி என்பவருக்கு ஏற்பட்ட காயமும் இடிந்த காயம் தான். அந்த காயமும் கீழே விழுந்தாலும் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். இடது கையில் காயம் இருந்ததாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

காயம்பட்ட 3 வது நபர் சுந்தரம்மாளுக்கு வலது தலையில் கிழிந்த காயம் இருந்தது. கீழே விழுந்தாலும், இடித்துக்கொண்டாலும் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். 02.09.2014 ம் தேதியன்று இரவு 07.00 மணிக்கு நடந்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். சுந்தரம்மாளுக்கு ஏற்பட்ட காயத்தை அளவு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட 4 வது நபர் சதீஸ்குமாருக்கு ஒரே ஒரு இடது காது பின் பக்கத்தில் காயம் இருந்தது. ஒருவரையொருக்வர் மோதிக்கொண்டாலும் கூட, நகம் பட்டு கிழிந்துகொள்ளும் என்றால் சரிதான்.

காயம்பட்ட நபர் சுந்தரம்மாள் காயம் ஏற்பட்டதாக இரவு 07.00 மணி என்று குறிப்பிட்டுள்ளார். ராணி, சக்கரவர்த்தி, சதீஸ்குமாருக்கு காயம் ஏற்பட்டதாக இரவு 09.00 மணி என்று குறிப்பி'டுள்ளார்கள் என்றால் சரிதான். என்னால் பார்க்கப்பட்ட 4 காயம்பட்டநபர்களுக்கும் இரும்பு பாறை கொண்டு தாக்கியதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நுண்கதிர் படம் எடுத்து எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I, Mannargudi.